# DEPOSITION OF WITNESS
## CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
## IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 81 /2021

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணமூர்த்தி | Father's/Husband's Name : | சுப்பாநாயுடு |
| Village | : நாச்சியார்புரம் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.10.2025

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** எனது தாத்தா பெயர் கோபால் நாயுடு அவர் 1980 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். மேற்படி கோபால் நாயுடுவிற்க்கு 2 ஆண் வாரிசுகள், நான்கு பெண் வாரிசுகள் உள்ளனர். மேற்படி 4 பெண் வாரிசுகளின் பெயர்கள் மங்கம்மாள், ருக்மணி அம்மாள், சீத்தம்மாள், கடைசி நபர் பெயர் தெரியவில்லை. எனது தந்தையும் அவரது சகோதரரான ராமகிருஷ்ணன் எப்போது பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று கேட்டால் எனது தாத்தா இறந்த பிறகு பாகம் பிரித்துக் கொண்டார்கள். நான் சொல்வது போல் எனது தந்தையும், எனது சித்தப்பாவும் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த பாகப்பிரிவின் போது பெண் பிள்ளைகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் பற்றி எந்த விபரம் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

2) என் தாத்தா கோபால் நாயுடுவின் பெண் வாரிசுகள் யாரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். ஆனால் அவர்களுக்கு வாரிசுகள் இருக்கிறார்கள். மேற்படி நபர்களில் ருக்மணி அம்மாளுக்கு தேவராஜ் என்ற மகன் இருக்கிறார் என்றால் சரிதான். சீத்தம்மாளுக்கு நாராயணன், செங்கப்பன் என்ற மகன்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். மங்கம்மாளுக்கு ராஜம்மாள், பெருமாள் என்கிற பவுன்ராசு என்று இரு பிள்ளைகள் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் இறந்து விட்டார்கள். மேற்படி பெருமாளுக்கு அவரது மனைவி பவுன்தாய், மகன் பாலாஜி, மகள்கள் விஜயா, சாந்தா வாரிசுகள் என்றால் சரிதான். எனது தந்தை சுப்பாநாயுடுக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். அதில் முதல் மனைவியின் வாரிசுகள் துரைராஜ், ராஜம்மாள், தனலட்சுமி என்று மூன்று வாரிசுகள் உள்ளனர் என்றால்

சரிதான். மேற்படி விபரங்களை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) கோபால் நாயுடுவின் வாரிசு விபரங்களை மறைத்து வழக்கு சொத்தில் பாத்தியம் இல்லாமல் இருப்பது போல் காட்டி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. கோபால் நாயுடுவின் அனைத்து வாரிசுகளின் இந்த வழக்கில் சேர்க்காததால் உரிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்திற்காக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நாகையசாமியின் தந்தை பெயர் வெங்கடசாமி என்றால் சரிதான். மேற்படி வெங்கடசாமிக்கு 1ம் பிரதிவாதியும் முத்துசாமி மற்றும் நாராயணசாமி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி முத்துசாமியின் மகன் தான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். நாராயணசாமியின் பேரன் 3வது பிரதிவாதி என்றால் சரிதான். நாகையசாமியோடு பிறந்த மூன்று பெண் வாரிசுகளும் உள்ளார்கள் என்றால் சரிதான்.

4) மேற்படி பெண் வாரிசுகளின் பெயர்கள் சீத்தம்மாள், சீனியம்மாள், நாகம்மாள் ஆகும். 1ம் பிரதிவாதியின் தந்தை வெங்கடசாமியின் அப்பா பெயர் அழகர்சாமி. மேற்படி அழகர்சாமி மகன் வெங்கடசாமி பெருமாள் சாமி மகன் வெங்கடசாமியிடம் வழக்கு சொத்துக்களை கடன் பொறுப்பிற்காக கிரைய பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. அதன் பிறகு மேற்படி நபர்களுக்குள் கடந்த 21.08.1935ம் தேதி மறு கிரையம் ஒப்பந்தம் எழுதி கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரத்தை கடன் பொறுப்பிற்காக எழுதிக் கொடுத்துள்ளதால் தாவா சொத்துக்கள் மற்றும் வேறு பல சொத்துக்களையும் பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. வெங்கடசாமி இறப்பிக்கு பிறகு அவரது வாரிசுகள் தாவா சொத்தை அடைந்து அனுபவம் செய்கிறார்கள் என்றால் சரியல்ல.

5) அதன்பிறகு வெங்கடசாமி மகன் முத்துசாமி 2016ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி முத்துசாமி இறந்தபிறகு, அவரது வாரிசுகளான 2ம் பிரதிவாதி மற்றும் அவரது இறந்த சகோதரர் பால்பாண்டியின் மனைவி சகுந்தலா மற்றும் மகள்கள் சுதா, பவானி தாவா சொத்துக்களின் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. வெங்கடசாமியின் மகன் நாராயணசாமி இறந்த பிறகு அவரது மனைவி சீத்தம்மாள் மற்றும் அவரது மகன்கள் தாவா சொத்தில் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. சீத்தம்மாள் இறந்த பிறகு

அவரது மகள்கள் கொண்டம்மாள், மங்கம்மாள், மஞ்சுளா ஆகியோர்கள் வாரிசு முறையில் அடைந்து கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவரது மகன் மணிகண்டன் இறந்த பிறகு மனைவி ராமதிலகம் மகன் 3ம் பிரதிவாதி, மகள் சர்மிளா கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

6) இந்த வழக்கின் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக் கோரி தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் கோபால் நாயுடுவின் வாரிசுகளையும், வெங்கடசாமி நாயுடுவின் வாரிசுகளையும் சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. கோபால் நாயுடுவின் வாரிசுகள் தாவா சொத்தில் பாகம் கேட்காததால் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. மேற்படி விபரங்களை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 06.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.10.06 17:24:56 +0530

District Munsif,
Aundipatti.